# திருவோணம் நக்ஷத்ரம் (ஆத்ம லிங்கம்)



**1. கணபதி வழிபாடு**

பரசிவம், சின்மயம், பூரணம்,

சிவபோகபாக்யம் பரமநிதியம்

**2. திருவருட்பாவில் சிவ திருவோணம் சக்தி**

பரையாதி, கிரணாங்க, சாங்க

சௌபாங்க விம்பாகாரநிர்வகற்பம்

**3. திருப்பாவைபாசுரம் – 14 திருவோணம் இயல்பு**

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்

செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பினகாண்

செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்

தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்

எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்

நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்

சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்

பங்கயக் கண்ணனைக் பாடேலோ ரெம்பாவாய்

**Video Link : https://youtu.be/OSDYKH9L03Y**

**விளக்கம் :**

உங்கள் தோட்டம் முதல் தங்கள் திருக்கோயில் வரை ஊரில் இருக்கும் அனைத்து நக்ஷத்ரங்களும் வேங்கடவனான திருவோணத்தில் அடக்கம். வேங்கடவன் காட்டும் சரணாகதி தத்துவத்தில் உள்ள திருவடிகளில் பொதிந்திருக்கும் நக்ஷத்ரங்களை இந்த பட்டியலில் காண்போம்.

வலது கால் கட்டை விரல் – திருவோணம். 2,3,4 விரல்கள் – பூரம், பூராடம், பூரட்டாதி. ஐந்தாவது விரல் – அஸ்வினி.

இடது கால் கட்டை விரல் – திருவாதிரை. 2,3,4 விரல்கள் – உத்திரம், உத்ராடம், உத்திரட்டாதி. ஐந்தாவது விரல் – ரேவதி. முப்பூரமும், மூன்று உத்திரமும் நங்காய் ஆகவும், நாணாதாய் ஆகவும், நாவுடையாய் ஆகவும் பாசுரத்தில் காட்டப் பெறுகின்றன. ஆம்பல் வாய் மகாலக்ஷ்மியாகவும் செங்கழுநீர்வாய் அலர்மேல் மங்கையாகவும் உள்ள நக்ஷத்திரங்களே முறையே அனுஷம், மிருகசீரிஷமும் ஆக இதயத்தில் உள்ளன. சங்கோடு சக்கரமும் என்பது அவிட்டமும், சதயமும் ஆகும். நாமத்தின் பாதம் பூசமாகவும் நாமத்தின் உச்சி புணர்பூசமாகவும் ராம ராம என்று வெளிப் படுகிறது. செங்கல் பொடிக்கூறை முகவாய் வெண்மையான பச்சைக் கற்பூரத்தில் ரோஹிணி என்னும் பங்கயக்கண்ணன் முகவாயில் வெளிப் படுகிறார். வாய் பேசும் நக்ஷத்திரங்கள் ஐந்து வலக்கையில் உள்ளன. சரனாகதி தத்துவத்தை அறிவிக்கவே பாதங்களை காட்டுகின்றன. சங்கிடுவான் போல் உலகிற்கு திருவோண தரிசனம் அறிவிப்பதற்காக சொல்லும் நக்ஷத்திரங்கள் ஐந்து இடக்கையில் உள்ளன.

| **விரல்கள்** | **வலக்கையில்** | **இடக்கையில்** |
|---|---|---|
| கட்டைவிரல் | ஆயில்யம் | சுவாதி |
| சுட்டுவிரல் | பரணி | சித்திரை |
| நடுவிரல் | மகம் | மூலம் |
| மோதிரவிரல் | கார்த்திகை | கேட்டை |
| சுண்டு விரல் | விசாகம் | அஸ்தம் |

வேங்கடவன் கழுத்தே அபிஜித், மகா விஷ்ணு, ஸ்வரூபமாக அனைத்து 27 + 1 நக்ஷத்திரங்களின் இணைக்கவும், அணைக்கவும் செய்கிறது. இந்த ஆதி கிரணங்கள் களிக்கும் சௌக்கியமே வேங்கடவனின் திருவோணமாகும். 27 + 1 நக்ஷத்திரங்களின் பாவனங்களை முடிவுக்கு கொண்டு வரும். விம்பாகார ஸ்வரூபமே திருவோணமாகும். வேம் + கட = வேங்கட – பாவம் தீர்வு என்று உடனடியாக பாவங்களுக்கு நிர்விகற்பமே.

சங்கோடு சக்கரம் ஏந்தும் தடக்கையன் திருவோணமாகும். பரையாதி கிரணாங்க, சாங்க சௌபாக்யம் அளிக்க வல்லதே சங்கும், சக்கரமும் ஆகும். உங்கள் நெஞ்சத்தில் தாயாரும், நாச்சியாரும், வீற்றிருக்கும் விவகாரமே இங்கு செங்கழுநீர் வாய் நெகிழ்ந்தும், ஆம்பல் வாய் கூம்பியும், இருப்பதைக் காண்பதே திருவோணமாகும். பத்மாவதி நாச்சியார் மலர்ந்தும், அனுராதா ஆம்பல் குவிந்தும் உள்ளன. எனவே பரையாதி கிரணங்கள் சூரியன் என்னும் திருவோணம் வந்த மாத்திரத்திலேயே உலகத்திற்கு வாழ்வாகும்.

நமது வாழ்வில் சொந்த வேலை பல இருந்தாலும் வந்த வேலையை 28 நக்ஷத்திரங்களும் அறிய வேண்டும். இவைதான் செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் என தாம்பூலம் தரியாமல் வந்த வேலையை கவனிப்பவர்கள். (இவர்களே பற்களாகும், பற்கள் வெண்மையாகவே யிருக்கும்.)

இந்த துறவிகள் சௌபாங்க சங்கிரைக்க திருக்கோயில் நோக்கி போகின்றனர். விகல்பமில்லாமல் இருக்கும் கதாபாத்திரம் இங்கு நங்கையாக,

நாணாதாயாக, நாவுடையாயாக, பங்கயக்கண்ணனை பாடும் பாவையாக, விம்பாகாரமாக விவரிக்கப்படுகிறது. எனவே திருவோண சக்கரத்தில் அனைத்து நக்ஷத்திரங்களும் உடனடியாக பாவ விமோசனம் பெறுகின்றனர். திருவோணமே வருக! திருவோணமே அருள்க!

## 4. வேதத்தில் திருவோணம் ஜோதிசக்தி

ஓம் பூர் புவ ஸ்வஹ **(மெட்டு)**

மஹா ச்ரோணாய வித்மஹே

புண்யஸ்லோகாய தீமஹி

விசக்ரசங்கு தீமஹி

தன்னோ ச்ரோணா ப்ரசோதயாத்

கோவிந்த பூரணம் முழுவட்டம்

சாங்கமும் காரணம் பரிவட்டம்

பங்கய சரணம் நடுவட்டம்

ஓணம் புண்ணியம் நமோ நமோ

கேட்டலும் கூட்டலும் வெங்கடேசா

வழக்கும் வாழ்க்கையும் வெற்றிபெற

பிம்பமும் விம்பமும் சதுரேழில்

சௌபாங்க சௌக்கிய நமோ நமோ

ஓம் சிவாய மே நம சிவாய மே

த்ரயம்பகாய மே சாயி தேவாய ஓம்

## 5. திருவோணம் கவிதை

ஆதி கிரணம் அநேக கோடி சூர்ய பிரகாசம்
ஜோதி ஸ்வரூபம் ஏழு வான கிரண விலாசம்
வாதி கீர்த்தனம் சௌபாக்ய விம்பாகாரம்
போதி சரணம் ஏகசரணம் ஸ்பரிசவிகற்பம்

திரு வோணம், கருவோணம் தருவோணம் மறுவோணம்
வரு வாமனம், மறுஆமனம், செறு ஓர்கணம், செருமறுக்ஷணம்
அரு தானம், அறு அசுரம், உருகாண பெருங்கலன்
பெறு கற்பம், தருயோகம் அது வோணம் இது தருணம்

ஏழுலகம் போற்றும் எழில் அழகு
ஏழுசுரம் சேர்ந்தும் பொழில் பழகு
ஏழுமலை ஏறிடின் உடன் உதவி
ஏழுதிரை நீக்கினும் பகர் முருகு

சர்வ தர்மம் விட்டிடுக – சரண வட்டம் வந்தடைகவே
கர்ம தத்வம் நாமஸ்மரணம் – உடன் கிடைக்கும் நிர்விகற்பமே
ஆம்சப்த ஆம் காமிக சுகம் கணத்தில் பாக்கியமே
மர்ம சூத்ரம் இகபர நேத்ரம் – தடையிலா வேகபயணமே

குறை ஒன்றுமில்லை மறை மூர்த்தி உலகே
நிறை ஒன்று நின் நாமம் வழி கீர்த்தி அலகே
பறை ஒன்று திரையிரண்டு கரை இடை நீரே
உறை ஒன்று வாளிரண்டு மாறுபாடிலா தேரே

மங்கள வடிவினமான ஜோதி மணியே
தங்கிடும் சாந்திஇன்பம் ஆதி அணியே
தொங்கிடும் உள்நாக்கில் மீதி பணியே
சாங்கிடும் காலைக்காற்றில் ஓதி தணியே

## 6. அபிராமி அந்தாதியில் திருவோணம் சக்தி

**பகை அச்சம் நீங்க**

பயிரவி, பஞ்சமி, பாசாங்குசை, பஞ்சபாணி, வஞ்சவர்

உயிரவி உண்ணும் உயர்சண்டி, காளி ஒளிரும்கலா

வயிரவி, மண்டலி, மாலினி, சூலி வராகி என்றே

செயிரவி நான்மறை சேர்திருநாமங்கள் செப்புவரே.

**சகல செல்வங்களையும் அடைய**

செப்பும், கனக கலசமும் போலும் திருமுலைமேல்

அப்பும் களப அபிராமவல்லி! அணிதிரளக்

கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழுங்கடையும்

துப்பும் நிலவும் எழுதிவைத்தேன்என் துணைவிழிக்கே,

**கட்டுகளில் இருந்து விடுபட**

விழிக்கே அருளுண்டு; அபிராமவல்லிக்கு வேதம்சொன்ன

வழிக்கே வழிபட நெஞ்சுண்டு; எமக்கு அவ்வழி கிடக்கப்

பழிக்கே சுழன்றுஎம் பாவங்களே செய்து பாழ்நரகக்

குழிக்கே அழுந்தும் கயவர் தம்மோடு என்ன கூட்டினியே.

**பெற்ற மகிழ்ச்சி நிலைத்திட**

கூட்டியவா! என்னைத் தன் அடியாரில் கொடியவினை

ஒட்டியவா! என்கண் ஒடியவா! தன்னை உள்ளவண்ணம்

காட்டியவா! கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா!

ஆட்டியவா நடம் ஆடகத்தாமரை ஆரணங்கே.

**Video Link : https://youtu.be/iVb8ulEiZMg**

## 7. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் திருவோணம் சக்தி ஓம்... ஓம்... ஓம்...

ஓம் உத்பவாய நம – மிகப்பெரிய பரிணாமமே போற்றி

ஓம் ஸுந்தராய நம – மாபெரும் மக்கள் கவர்ச்சியே போற்றி

ஓம் ஸுந்தாய நம – மலரினும் மெல்லிய கொடியே போற்றி

ஓம் ரத்நநாபாய நம – ஆக்கத்தை உருவாக்கிய தேக்கமே போற்றி

ஓம் ஸுலோசநாய நம – விழிப்புணர்வின் இரு விழிகளே போற்றி

ஓம் அர்க்காய நம – தெய்வங்களின் உணர்வு தெய்வமே போற்றி

ஓம் வாஜஸநாய நம – ஞானிகட்கு அருளும் பரம ஞானியே போற்றி

ஓம் ஸ்ருங்கிணே நம – மச்ச அவதாரமாய் நின்ற காப்பாளரே போற்றி

ஓம் ஜயந்தாய நம – எளிதில் பணிமுடிக்கும் ரகசியமே போற்றி

ஓம் ஸர்வவிஜ்ஜயினே நம – அகஎதிரிகளை நீர்மூலமாக்கி மதங்கொண்டவரையும் மாய்ப்பவரே போற்றி

ஓம் உத்பவாய நம – சுயமாக உதிப்பவனே

ஓம் ஸுவர்ணபிந்தவே நம – தங்கத்தோள் வலிமை எங்கும் பளபளக்கவே போற்றி

ஓம் அக்ஷோப்யாய நம – நன்றாயினும், தீதாயினும் பாதிக்கப்படாத பரம்பொருளே போற்றி

ஓம் ஸர்வவாகீஸ்வராய நம – மெத்த படித்தவர்களின் பல்கலை நிபுணரே போற்றி

ஓம் மஹாஹ்ருதாய நம – மனதிற்கினிய பரமானந்த புஷ்கரணியே போற்றி

ஓம் மஹாகர்த்தாய நம – மாயைகளை ஆட்சி செய்து அனுபவிக்கும் கள்ளதமயனே போற்றி

ஓம் மஹாபூதாய நம – முக்காலத்தை உணர்ந்து எதிலும் ஒட்டாத தேனீயே போற்றி

ஓம் மஹாநிதயே நம – மகாநிதியம் கொடுக்கும் பேராதரவே போற்றி

ஓம் குமுதாய நம – உலகியல் சந்தோஷம் தரும் உன்னத குமுதமே போற்றி

ஓம் குந்தராய நம – அறிவுகளை தூண்டும் மல்லிகை வாழ்த்துக்களே போற்றி

ஓம் பர்ஜந்யாய நம – மெய்ஞான, மெய்சுக, இருமாய மல்லிகை புஜங்களே போற்றி

ஓம் பாவநாய நம – உடல், உள்ளம், உயிர் மூன்றுக்கும் இவர்தரும் மேகங்கள் மழையாக்குபவனே போற்றி

ஓம் அநிலாய நம – நினைத்தாலே சுகமளிக்கும் மகிழ்ச்சியே போற்றி

ஓம் அம்ருதாம்ஸாய நம – நிரந்தர யோக நித்திரையே நலம் தரும் விழிப்புணர்வே போற்றி

ஓம் அம்ருதவபுஷே நம – சௌபாக்கியம் தரும் அமிர்தமே போற்றி

ஓம் ஸர்வஜ்ஞாய நம – மரணமிலா பெருவாழ்வின் ஆரம்பமே போற்றி

ஓம் ஸர்வதோமுகாய நம – சர்வ தரிசனம் தரும் அதோ முகமே போற்றி

ஓம் ஸுலபாய நம – சர்வ பாவங்களுக்கும் மன்னிப்பு அளிப்பவரே போற்றி

ஓம் ஸுவ்ரதாய நம – எளிதில் அருள்புரியும் அன்பே, ஆருயிரே போற்றி

ஓம் ஸித்தாய நம – பழம், இலை, நீர் தரும் அன்பர்க்கு அருள்பவரே போற்றி

ஓம் ஸத்ருஜிதே நம – விரத காலமன சாட்சியே போற்றி

ஓம் ஸத்ருதாபநாய நம – சித்திக்கும் சிற்பமே போற்றி

ஓம் ந்யக்ரோதாய நம – நவம் கடமே போற்றி

ஓம் உதும்பராய நம – நிலத்தில் விளையும் ஆக்கமே அறுவடையே போற்றி

ஓம் அஸ்வத்தாய நம – பாவங்களின் எதிரியே போற்றி

ஓம் சாணூராந்த்ர–நிஷூதநாய நம – விண்ணொளியே போற்றி

## 8.லலிதா ஸஹஸ்ரநாமத்தில் திருவோணம் சக்தி

விஸ்வகர்ப்பாஸ்வர்ணகர்ப்பாவரதா வாகதீச்வரீ
த்யானகம்யாபரிச்சேத்யாஜ்ஞானதாஜ்ஞானவிக்ரஹா

ஸர்வவேதாந்த ஸம்வேத்யா ஸத்யாந்த ஸ்வரூபிணீ
லோபாமுத்ரார்ச்சிதாலீலாக்லுப்தப்ரஹ்மாண்டமண்டலா

அத்ருச்யாத்ருச்யரஹதா விஜ்ஞாத்ரீவேத்யவர்ஜிதா
யோகினீயோகதாயோக்யாயோகானந்தாயுகந்தரா

இச்சாசக்தி ஜ்ஞானசக்தி க்ரியாசக்தி ஸ்வரூபிணீ
ஸ்ர்வாதாரா ஸுப்ரதிஷ்டா ஸதஸத்ரூப தாரிணீ

அஷ்டமூர்த்தி ரஜாஜைத்ரீலோகயாத்ரா விதாயினீ
ஏகாகினீபூமரூபா நிர்த்வைதாத்வைதவர்ஜிதா

அன்னதா வஸுதாவ்ருத்தாப்ரஹ்மார்மைக்ய ஸ்வரூபிணீ
ப்ருஹதீ ப்ராஹ்மணீ ப்ராம்ஹப்ரஹ்மாநாந்தாபலிப்ரியா

**Video Link : https://youtu.be/DtSBLpQStT4**

## 9. கந்தகுரு கவசகத்தில் திருவோணம் சக்தி

ஸ்கந்தகுரு கவசமிதை கருத்திலிருத்தி ஏற்றுவீரேல்

கர்வம் காமக்ரோதம் கலிதோஷ மகற்றுவிக்கும்

முன்செய்த வினையகன்று முருகனருள் கிட்டிவிடும்

அறம் பொருள் இன்பம் வீடு அதிசுலபமாய்க் கிட்டும்

ஆசாரம் சீலமுடன் ஆதிநேம நிஷ்டையுடன்

கள்ளமிலா வுளத்தோடு ஸ்கந்தகுரு கவசத்தன்னை

சிரத்தா பக்தியுடன் சிவகுமாரனை நினைத்துப்

பாராயணம் செய்வீரேல் பார்க்கலாம் ஸ்கந்தனையும்

ஸ்கந்தகுரு கவசமிதை மண்டலம் நிஷ்டையுடன்

பகலிரவு பாராமல் ஒரு மனதாய்ப் பகர்வீரேல்

திருமுருகன் வேல்கொண்டு திக்குகள் தோறும் நின்று

காத்திடுவான் ஸ்கந்தகுரு கவலையில்லை நிச்சயமாய்

ஞான ஸ்கந்தனின் திருவடியை நம்பியே நீ

ஸ்கந்தகுரு கவசந்தனை ஓதுவதைத் தவமெனவே

உணர்ந்து கொண்டு ஓதுவையேல் உனக்குப் பெரிதான

இகபர ஸௌகமுண்டாம் என்னாளும் துன்பமில்லை

துன்பம் அகன்றுவிடும் தொந்தரவுகள் நீங்கிவிடும்

இன்பம் பெருகிவிடும் இஷ்டஸித்தி கூடிவிடும்

பிறவிப் பிணியகற்றி ப்ரம்மநிஷ்டையும் தந்து

காத்து ரக்ஷிக்கும் ஸ்கந்தகுரு கவசமுமே

**Video Link : https://youtu.be/fO7MD2St1iU**

**10. கந்தர் அநுபூதி திருவோணம் சக்தி**

மாஏழ் சனனம் கெட மாயைவிடா

மூஏடணை என்று முடிந்திடுமோ

கோவே, குறமின் கொடிதோள் புணரும்

தேவே சிவ சங்கர தேசிகனே.(39)

வினை ஓட விடும் கதிர் வேல் மறவேன்

மனையோடு தியங்கி மயங்கிடவோ?

சுனையோடு, அருவித் துறையோடு, பசுந்

தினையோடு, இதணோடு திரிந்தவனே.(40)

**Video Link : https://youtu.be/x9sjGNdLHkw**

**11. ராகங்களில் திருவோணம் சக்தி**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| சிம்மேந்ரமத்யமாம் | ஹேமாவதி | ஹேமாவதி | தர்மாவதி |

**12. மூலமந்திரம்**

வினா வெங்கடேசம் நனாதோ நனாதஸ் :
சதா வெங்கடேசம் ஸ்மராமி ஸ்மராமி :
ஹரே வெங்கடேசம் ப்ரஸீத ப்ரஸீத :
ப்ரியம் வெங்கடேசம் ப்ரயச்ச ப்ரயச்ச :

**13. விருட்ச சக்தி பெற நட வேண்டிய மரம்**

| பாதம் 1 | பாதம் 2 | பாதம் 3 | பாதம் 4 |
|---|---|---|---|
| வெள்ளெருக்கு | கருங்காலி | சிறுநாகப்பூ | பாக்கு |

## 14. பரிகாரம்

- அரசமரத்தடியில் கடுகு எண்ணெய் விளக்குஏற்றி சுற்றி வரவும்.
- வசதிக்கேற்ப அன்னதானம் செய்யவும்.
- குறைந்தபட்சம் 7 நபர்களுக்கு உதவிடுக.
- உங்கள் வழிபாட்டிற்கு ஏற்றபடி மந்திரங்களை பாராயணம் செய்யவும்.
- கோவிலுக்கு சென்று சுவாமியை தரிசிக்கவும்.
- 2x2 கண்ணாடி வைத்து உங்கள் முகத்தை பார்த்து தியானம் செய்யவும். (ஆடி தியானம்).
- நட்சத்திர கோயில் **அருள்மிகு பிரசன்ன வெங்கடேசப்பெருமாள் கோயில்,** திருப்பாற்கடல் - வேலூர்.


**Aathma Trust (ஆத்ம லிங்கம்)**
Regd No: 96/19
33.கோசாலை, கிரிவலம்,
திருவண்ணாமலை - 600 501.

**Website :** www.aathmanakshtra.org
www.yaasha.in
**Email :** jhohumm@gmail.com
**Youtube :** aathmanakshatra